முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2020 சனவரி

# (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்

(Business Law and Ethics)

2020–01–18
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடம்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

பக்கங்கள் : 07
வினாக்கள் : 10

(3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட* ***விடைப் புத்தகத்தில்*** *பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரு மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *நீங்கள் ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*

(5) ***வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு* ***வினைச் சொல்*** *உள்ளடங்கியிருக்கிறது (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பத்து (10) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** முதல் **1.7** வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை அவ்வினாவுக்குரிய இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** இலங்கையில் அடிப்படை உரிமைகள் வழக்குகள் தொடர்பான பிரத்தியேக நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கின்ற நீதிமன்றம்:

(1) மேன்முறையீட்டு நீதிமன்றம் (2) உச்ச நீதிமன்றம்

(3) மாவட்ட நீதிமன்றம் (4) நீதிவான் நீதிமன்றம்

**1.2** பின்வருவனவற்றில் சரியான கூற்றினைத் தெரிவுசெய்க:

(1) தேசவழமைச் சட்டம் என்பது இலங்கையிலுள்ள ஒரு விசேட சட்டமாகும்.

(2) இலங்கையின் பொதுச் சட்டம் ரோமன் - டச்சுச் சட்டமாகும்.

(3) நீதிவான் நீதிமன்றம் குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கான உண்மையான (original) நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளது.

(4) மேலுள்ள சகலதும்.

**1.3** விற்பனை ஒப்பந்தத்தைச் செய்ததன் பின்னர் விற்பனையாளரால் உற்பத்தி செய்யப்படும் அல்லது கையகப்படுத்தப்படும் பொருட்கள்:

(1) எதிர்காலப் பொருட்கள் (2) இருப்பிலுள்ள பொருட்கள்

(3) குறிப்பான பொருட்கள் (4) நிச்சயிக்கப்படாத பொருட்கள்

**1.4** பின்வருவனவற்றுள் அமைப்பக விதிகளில் (Articles of Association) **உள்ளடக்கப்படாதது** எது?

(1) கம்பனியின் நோக்கங்கள்

(2) கம்பனியின் பங்குதாரர்களின் உரிமைகளும் கடப்பாடுகளும்

(3) கம்பனியின் முகாமையும் நிருவாகமும்

(4) பணிப்பாளர்களின் சம்மதம்

**1.5** பின்வரும் விளம்பரம் செய்தித்தாள் ஒன்றில் காணப்பட்டது:

**“கார் விற்பனைக்கு. அதிகளவில் பாவிக்கப்படாதது, மிகவும் நல்ல நிலையில் உள்ளது, விலை ரூபா 3,600,000/-”**

ஒப்பந்தச் சட்டத்திற்கு இணங்க, இது:

(1) விற்பனைக்கான விருப்பறிவிப்பொன்று (An offer to sell)

(2) கொடைமுனைவுக்கான அழைப்பொன்று (An invitation to treat)

(3) விருப்பறிவிப்பின் முடிவுறுத்தலொன்று (A termination of offer)

(4) ஏற்பனவொன்று (An acceptance)

**1.6** பின்வருவனவற்றுள் எது ஒரு மாற்றத்தகு **சாதனமன்று**?

(1) காசுக் கட்டளை (2) வாக்குறுதிச் சீட்டுகள்

(3) மாற்றுண்டியல் (4) காசோலைகள்

**1.7** பின்வருவனவற்றுள் முகவர் ஒருவரின் கடமை **அல்லாதது** எது?

(1) முகவரானவர் முதல்வரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

(2) முகவரானவர் தளரா ஊக்கத்துடன் ஒப்பந்தத்தைச் செயற்படுத்துதல் வேண்டும்.

(3) முகவரானவர் இரகசிய இலாபமொன்றை உழைத்தல் வேண்டும்.

(4) முகவரானவர் உரிய திறனுடனும் கவனத்துடனும் செயற்படுதல் வேண்டும்.

*இல. **1.8** முதல் **1.10** வரையான வினாக்களுக்கான சுருக்க விடைகளை வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.8** பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்திற்கிணங்க உட்கிடையான நிபந்தனைகள் (implied conditions) இரண்டினைக் (02) குறிப்பிடுக.

**1.9** இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

**1.10** சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் கொடுப்பனவு முறைகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

**பெரேராவும் சொய்சாவும்** காகிதாதிகளை வாங்கி, விற்கின்ற பங்குடமை வியாபாரம் ஒன்றில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கிடையில் எவ்வித பங்குடமை உடன்படிக்கையும் ஏற்படுத்தப்படவில்லை என்பதுடன் அவர்கள் பங்குடமை வியாபாரத்தை நடத்துவதற்காக 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தைப் பின்பற்றுகின்றனர். **சொய்சா** சந்தை விலையில் 50 % கழிவுடன் சில காகிதாதிகளை வாங்கியிருந்தார். பின்னர் அவற்றைச் சந்தை விலையில் பங்குடமைக்கு விற்பனை செய்ததுடன் இந்தக் கொடுக்கல் வாங்கலின் மூலம் **சொய்சா** இலாபத்தை ஈட்டியிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

மேற்படி கொடுக்கல் வாங்கலில் இருந்து **சொய்சா**வால் ஈட்டப்பட்ட இலாபத்தை மீளப் பெறுவதற்கு பங்குடமைக்கு உரித்துள்ளதா (entitle) என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 03

ஒரு கணக்காளர் அவர் பணி புரியும் துறையைப் பொருட்படுத்தாது, பக்கச்சார்பின்றியும் தொழிலின் நெறிமுறை வழிகாட்டல்களுக்கு விசுவாசமாகவும் இருத்தல் வேண்டும். அவர் அவ்வாறு செய்யத் தவறினால், அவர் நெறிமுறை மீறல்கள் தொடர்பான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியேற்படும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

நிறுவனமொன்றின் கணக்காளர் ஒருவரால் எதிர்கொள்ளப்படுகின்ற நெறிமுறைச் சிக்கல்கள் (ethical issues) ஐந்தினைக் (05) **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

### வினா 04

சர்வதேச வர்த்தகம் என்பது இரண்டு நாடுகளுக்கிடையிலான அல்லது இரண்டு நாடுகளில் வதிபவர்களுக்கிடையிலான ஒரு வர்த்தகம் ஆகும். வார்நாமம் (bill of lading) என்பது சர்வதேச வர்த்தகத்திலுள்ள மிக முக்கிய ஆவணமாகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

வார்நாமத்தின் தொழிற்பாடுகள் இரண்டினை (02) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 05

**வரையறுக்கப்பட்ட பார்மா கம்பனி** மோட்டார் கார்களை இறக்குமதி செய்து மேல் மாகாணத்தில் விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. இக்கம்பனி தனது வியாபாரத்தை ஏனைய மாகாணங்களுக்கும் விஸ்தரிப்பதற்குத் திட்டமிடுகிறது. **வரையறுக்கப்பட்ட பார்மா கம்பனியின்** பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) ஒரு முகவராக **ரவி** என்பவரை நியமனம் செய்வதற்காக அவருடன் கலந்தாலோசித்துள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

முதல்வர் மற்றும் முகவர் உறவு (relationship) உருவாகக்கூடிய வழிவகைகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 06

காலக்கிரமத்தில் உண்டியலொன்றை வைத்திருப்பவர் என்பது உண்டியலில் எவ்வித உரித்தையும் கொண்டிராத அல்லது குறைபாடுடைய உரித்தைக் கொண்டுள்ள ஒருவருக்கு பெறுமதிமிக்க ஆலோசனையை வழங்குவதால் அதிலுள்ள குறைபாட்டை அறியாது நல்லெண்ண அடிப்படையில் வைத்திருப்பவரைக் குறிக்கும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

உண்டியலொன்றைக் காலக்கிரமத்தில் வைத்திருப்பவர் ஒருவராகக் கருதப்படுவதற்கு நிறைவு செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## <u>பகுதி C</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

**கசுன்** மற்றும் **மாயா** ஆகியோருக்கிடையிலான வியாபாரக் கொடுக்கல் வாங்கல் ஒன்றின் மீது **கசுன்** ரூபா 1 மில்லியனை **மாயாவுக்குக்** கொடுக்க வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் **கசுனின்** வியாபாரப் புரள்வின் (விற்பனை) வீழ்ச்சி காரணமாக, அவர் இக்கடனை அடைப்பதற்கு ஒரு வருட காலத்தை வழங்குமாறு **மாயாவிடம்** கோரியிருக்கிறார். **மாயா கசுனின்** ஆயுள் மீதான ஓர் ஆயுள் காப்புறுதியைப் பெற முடியும் என்ற நிபந்தனையின் பேரில் இந்த நீட்டிப்புக் கோரிக்கையைக் கவனத்திலெடுத்திருக்கிறார்.

மேலும் **மாயா**வின் கணவரான **சேனா** ஆயுள் காப்புறுதி ஒன்றைப் பெற்றுள்ளதுடன் அவர் அண்மையில் கடுமையான மாரடைப்பினால் தாக்கப்பட்டு சத்திரசிகிச்சை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். காப்புறுதியை பெற்றுக்கொள்ளும்போது இந்த விடயம் காப்புறுதிக் கம்பனிக்கு வெளிப்படுத்தப்படவில்லை. காப்புறுதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், **சேனா** மாரடைப்பு காரணமாக மரணமடைந்தார். **மாயா** காப்புறுதிக் கம்பனியிடம் உரிமைக் கோரிக்கையைச் (claim) செய்திருக்கிறார். அந்த நேரத்தில் காப்புறுதிக் கம்பனிக்கு **சேனா** ஒரு இதய நோயாளியாக இருந்தவர் என்பது தெரிய வரவே அவ்வுரிமைக் கோரிக்கையை கம்பனி நிராகரித்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) **மாயா கசுனின்** ஆயுள் மீதான காப்புறுதியினை பெற முடியுமா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) **மாயா**வால் செய்யப்பட்ட உரிமைக் கோரிக்கையை காப்புறுதிக் கம்பனியால் நிராகரிக்க முடியுமா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 08

(a) தொழில்தருநருக்கும் ஊழியருக்குமிடையிலான உறவானது சேவை ஒப்பந்தம் வாயிலாக எழுகின்றது. மறுபுறத்தில், தொழில்தருநருக்கும் சுயாதீன ஒப்பந்தகாரருக்குமிடையிலான உறவு சேவைக்கான ஒப்பந்தம் வாயிலாக எழுகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

ஓர் ஊழியரையும் ஒரு சுயாதீன ஒப்பந்தகாரரையும் வேறுபடுத்துவதற்குக் காணப்படுகின்ற சோதனைகள் (tests) மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **சண்முகம்** 2002 சனவரி 01 ஆந் திகதி கம்பனி ஒன்றில் இணைந்து கொண்டதுடன் அவருடைய முதல் மாதச் சம்பளம் ரூபா 50,000/- ஆக இருந்தது. தற்போது **சண்முகம்** கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக (CEO) இருப்பதுடன் அவரது மாதாந்தச் சம்பளமாக ரூபா 500,000/- காணப்படுகிறது. எவ்வாறாயினும் **சண்முகம்** 2020 பெப்ரவரி 01 ஆந் திகதியில் இருந்து வலுப் பெறும் வகையில் தனது இராஜினாமாவைத் (resignation) சமர்ப்பித்துள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

இராஜினாமாத் தருணத்தில் **சண்முகத்தின்** பணிக்கொடை உரித்தினைக் (gratuity entitlement) **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 09

(a) பணச் சலவை (money laundering) என்பது சட்டவிரோத நடவடிக்கைகளிலிருந்து சம்பாதித்த பணத்தினை அதன் சட்டவிரோதத் தன்மையை மறைப்பதற்காக முறைசார் நிதி முறைமையில் உட்படுத்துகின்ற மோசடி முறைமையாகும். இந்தப் பகுதியை உள்ளடக்குவதற்காக 2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பணச் சலவை தடுப்புச் சட்டத்தை (prevention of money laundering act) இலங்கை அறிமுகப்படுத்தியுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

இலங்கையின் பணச் சலவைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றச் செயல்கள் (சட்டவிரோத நடவடிக்கைகள்) ஐந்தினைக் (05) **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(b) 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் ஏற்பிசைவு செய்யப்பட்ட பல வகையான புலமைச் சொத்துக்கள் காணப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது:**

புலமைச் சொத்துக்கள் சட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட பின்வருவனவற்றை **விபரிக்குக**:

(i) குறியீடுகள் (Marks)

(ii) வர்த்தக நாமம் (Trade Name) (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# பகுதி D

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 10

(A) பழங்கால ஜாடிகளைச் (pots) சேகரிப்பதில் ஆர்வமுள்ளவரான **தசுன்** வார இறுதிச் செய்தித்தாள் ஒன்றில் பழங்கால ஜாடிகளின் ஏல விற்பனை தொடர்பான ஒரு விளம்பரத்தைப் பார்த்துள்ளார். ஏல விற்பனையானது யூன் மாத நடுப்பகுதியில் கொழும்பில் நடத்தப்படவிருந்தது. அந்த நாட்களில் **தசுன்** தனது சிறந்த நண்பியான **சாரா**வுடன் ஐரோப்பியச் சுற்றுப்பயணம் ஒன்றிற்குத் திட்டமிட்டிருந்தார். ஆனால் ஏல விற்பனை மீதான அவரது அதீத ஆர்வம் காரணமாக சுற்றுப்பயணத்தை இரத்துச் செய்வதற்கு அவர் தீர்மானித்தார். அவர் ஏலம் இடப்படும் உருப்படிகளின் பட்டியலில் குறிப்பிடப்பட்ட ஒரு விலைமதிப்பற்ற பழங்கால ஜாடியை ஏலம் எடுப்பதன் பொருட்டு ஏல விற்பனையில் கலந்து கொள்வதற்காக காலியிலிருந்து கொழும்புக்குப் பயணித்தார். எவ்வாறாயினும், பலத்த எதிர்பார்ப்புடன் **தசுன்** ஏலத்திற்கு வருகை தந்தபோது, தவிர்க்க முடியாத காரணத்தால் ஏலம் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்ட ஒரு அறிவித்தலை வெளிப்புறத்தில் கண்ணுற்றார். **தசுன்** நம்பிக்கையற்றவராக உணர்ந்ததுடன் ஏல விற்பனையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு விரும்பினார்.

அதே வேளை **சாரா,** ஐரோப்பாவுக்குச் செல்வதற்கான தனது திட்டத்தை தொடரத் தீர்மானித்தார். அவர் கொழும்பிலுள்ள பிரபல பயணக் கம்பனி ஒன்றின் ஊடாக தனது விமானப் பயணச் சீட்டையும் தங்குமிடத்தினையும் முன்பதிவு செய்து கொண்டார். அவர்கள் **சாரா**விடம் ஒரு வணிக வகுப்பு விமானப் பயணச் சீட்டு அவருக்காக முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் நகர மத்தியிலிருந்து 500 மீற்றர் தொலைவிலுள்ள நான்கு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்குமிடம் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர். அவர்கள் அவருக்காக ஹோட்டல் அறையை முன்பதிவு செய்வதற்கு முன் அதன் புகைப்படங்களை அவருக்கு மின்னஞ்சல் செய்திருந்தனர். எவ்வாறாயினும், பயணக் கம்பனியானது தவறாக அவருக்கு சிக்கன வகுப்பு விமானப் பயணச் சீட்டை முன்பதிவு செய்திருப்பதையும் நகர மத்தியிலிருந்து கிட்டத்தட்ட 5 கிலோமீற்றர் தூரத்தில் ஹோட்டல் அறை முன்பதிவு செய்யப்பட்டிருப்பதையும் பயணக் கம்பனியால் அவருக்கு அனுப்பப்பட்ட எந்தவொரு புகைப்படமும் அந்தக் ஹோட்டல் அறையுடன் பொருந்தியிருக்கவில்லை என்பதையும் **சாரா** கண்டுபிடித்தார். இந்தத் தவறுகள் காரணமாக அவர் மேலதிகமாக 5000 யூரோக்களைச் செலவிட்டிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

பின்வருவனவற்றை **ஆராய்க**:

(a) **தசுன்** மற்றும் **ஏல விற்பனையாளர்** ஆகியோருக்கிடையில் செல்லுபடியான ஒப்பந்தமொன்று காணப்படுகிறதா (08 புள்ளிகள்)

(b) பயணக் கம்பனி தொடர்பில் **சாரா**வுக்கு இருக்கின்ற சட்ட உரிமைகளும் நிவாரணங்களும் (10 புள்ளிகள்)

(B) **டேவிட்** என்பவர் **பெரேராவின்** மோட்டார் காரைத் திருடி, பெறுமதிக்கான நல்லெண்ணத்தில் (good faith for value) அதனைக் கொள்வனவு செய்த **ரொனால்டோ**விற்கு விற்பனை செய்தார். அதன் பின்னர், **ரொனால்டோ** அதனை **சில்வா** என்பவருக்கு விற்பனை செய்தார். இரண்டு மாதங்களின் பின்னர், காவல் துறையினர் வாகனத்தைக் கைப்பற்றி உண்மையான உரிமையாளரிடம் அதனை ஒப்படைத்தனர். **சில்வா** செலுத்திய பணத்தை **ரொனால்டோ** திருப்பிக் கொடுத்ததுடன் அவர் செலுத்திய பணத்தை மீளப் பெறுவதற்காக **டேவிட்** இற்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**ரொனால்டோ** தனது பணத்தை **டேவிட்** இடமிருந்து மீளப் பெறுவதற்கு உரித்துடையவரா என்பதை **ஆராய்க.** (07 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |